**<u>சார்பு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை: திரு.மு.மணிகண்டன், எம்.ஏ.,எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, உடுமலைப்பேட்டை.**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு குரோதி வருடம் சித்திரை மாதம் 05 ம் நாள்)

**<u>அசல் வழக்கு எண். 381 of 2023</u>**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆர்.அய்யம்பாளையம், க.எண்.1/8, என்ற முகவரியில் வசிக்கும், லேட்.பழனிச்சாமிசெட்டியார், என்பவரின் மகன் சுமார் 60 வயதுள்ள செல்வராசு. ... வாதி

/எதிர்/

1.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆர்.அய்யம்பாளையம், வடக்கு தெரு, க.எண்.1/16, என்ற முகவரியில் வசிக்கும், லேட்.பழனிச்சாமிசெட்டியார், என்பவரின் மகளும், சண்முகசுந்தரம் என்பவரின் மனைவியுமான சுமார் 72 வயதுள்ள ச.ராஜம்மாள்.

2.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆர்.அய்யம்பாளையம், வடக்கு தெரு, க.எண்.1/29, என்ற முகவரியில் வசிக்கும், லேட்.பழனிச்சாமிசெட்டியார், என்பவரின் மகளும், சுந்தர்ராஜன் என்பவரின் மனைவியுமான சுமார் 70 வயதுள்ள துரையம்மாள்.

3.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆர்.அய்யம்பாளையம், நெசவாளர் காலணி, க.எண்.1/80, என்ற முகவரியில் வசிக்கும், லேட்.பழனிச்சாமிசெட்டியார், என்பவரின் மகளும், அண்ணாத்துரை என்பவரின் மனைவியுமான சுமார் 65 வயதுள்ள பாக்கியலட்சுமி.

4.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆர்.அய்யம்பாளையம், நெசவாளர் காலணி, க.எண்.1/80, என்ற முகவரியில் வசிக்கும், லேட்.பழனிச்சாமிசெட்டியார், என்பவரின் மகளும், காளிமுத்து என்பவரின் மனைவியுமான சுமார் 50 வயதுள்ள ராஜேஸ்வரி. ... பிரதிவாதிகள்

வாதியின் தகப்பனார் பழனிச்சாமி செட்டியார் என்பவர் வாதிக்கு கடந்த 25-04-2005ம் தேதி வைத்த உயில் ஆவணத்தின் படி வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும் அதன் தொடர்பரிகாரமாக வாதியின் சொத்தை அமைதியான முறையில் சுவாதீனம் வைத்து அனுபவம் செய்து வரவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எந்தவித இடையூறும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டும் என்றும் வழக்கு செலவு தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்க வேண்டி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 27.06.2023 |
| வழக்கு மூலம் | : | 23.09.1972, 25.04.2005, ஆகிய தேதிகளிலும் அதற்குப் பின்னிட்டு வருகின்ற ஒவ்வொரு தேதிகளிலும் உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் கிராமத்தில் வழக்குமூலம் உண்டாகியுள்ளது. |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.1,67,500/-, இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம் 25(b)-ன் படி ரூ.5,025/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கில் வாதிக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.மகுடீஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகளை இந்நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இறுதியாக 27.03.2024ம் நாள் என் முன்பாக வரப்பட்டு வாதி தரப்பு வாதம் என்னால் கேட்கப்பட்டு இன்று வரை பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்.

## <u>தீர்ப்பாணை</u>

1. வாதிக்கு தாவாவில் கோரியவாறு 25.04.2005 தேதியிட்ட உயில் ஆவணத்தின் படி வாதிக்கு தாவாச் சொத்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது,
2. மேலும் தொடர்பரிகாரமாக வாதி தாவாச் சொத்தில் அமைதியான முறையில் சுவாதீனம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அல்லது ஏஜெண்ட்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
3. தாவாவில் வாதிக்கு ஏற்பட்ட செலவுத் தொகையான ரூ.5,045/-ஐ பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

## <u>தாவா செலவு தொகை பட்டியல்</u>

| <u>வாதி தரப்பில்</u> | | | <u>பிரதிவாதிகள் தரப்பில்</u> |
|---|---|---|---|
| வழக்கிற்கு முத்திரைத்தாள் | ரூ | 5,025.00 | |
| வக்காலத்து | ரூ | 10.00 | |
| கட்டளை சேர்ப்பிப்பதற்கு ஸ்டாம்பு | ரூ | 10.00 | |
| | மொத்தம் | 5,045.00 | |

(செலவு தொகை தாக்கல் செய்யப்படவில்லை)

## <u>சொத்து விபரம்</u>

உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராம நல்லூர் தெற்கு, கூட்டுப் பட்டா எண் 532, நில உரிமை பதிவேடு எண் 259915, சர்வே எண் 384/1 நன்செய் ஹெக் 1 ஏர்ஸ் 23.0 ல் (குளத்துப்பாசனம்) ல் 1/3 பாகம் உள்ள நிலம் மற்றும் மேற்படி நிலத்திற்கேட்பட்ட சகல பாதை பாத்தியங்கள் யாவும் சேர்ந்து.

2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் இடப்பட்டது.

ஒம்/-மு.மணிகண்டன்,
சார்பு நீதிபதி,
உடுமலைப்பேட்டை.